# வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

## LKI லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாயக் கற்கைகள் நிறுவனம்

2006 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட, 2000 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை மூலோபாய கற்கைகள் நிறுவனச் சட்டத்தால் நிறுவப்பட்ட லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாயக் கல்வியியல் நிறுவனம் (LKIIRSS), குறிப்பாக பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, சட்டம், பொருளாதாரம், கலாசார உறவுகள், விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் இலங்கையின் சர்வதேச உறவுகள் பற்றிய ஆய்வு உள்ளிட்ட இலங்கையின் மூலோபாய நலன்களை ஆய்வு செய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்ட பல்துறை ஆராய்ச்சி நிறுவனமொன்றாகச் செயற்படுகிறது.

லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாயக் கற்கைகள் நிறுவனம் (LKIIRSS) அதன் நிர்வாகப் பணிப்பாளராகப் பணியாற்ற ஒரு துடிப்பான நபரைத் தேடுகிறது. நிர்வாகப் பணிப்பாளர் என்பவர், சிறந்த முகாமைத்துவத் திறன்களைக் கொண்டவராகவும், பரந்த அரசு, இராஜதந்திர மற்றும் கல்விசார் சமூகங்களுடன் ஈடுபடும் திறன்கள் நிரூபிக்கப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| **பதவி** | **நிர்வாகப் பணிப்பாளர்** |
| **இடம்** | கொழும்பு, இலங்கை |
| **சம்பளம்** | கவர்ச்சிகரமான ஊதியத் தொகுப்பு வழங்கப்படுகிறது |
| **பதவி வகை** | முழுநேரம் |
| **கடமைகளில் அடங்குபவை** | 1. லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்<br>2. இலங்கையிலும், வெளிநாட்டிலும் நிறுவனத்தின் நலன்களை மேம்படுத்துதல்<br>3. பலதரப்பட்ட ஆராய்ச்சி அதிகாரிகள் குழுவை நிர்வகித்தல். |
| **முடிவுத்திகதி** | 16.00 மணி (இலங்கை நியம நேரம்) 2025 ஜூலை 7 |

| | |
|---|---|
| **மின்னஞ்சல்:**<br>addl.secadmin@mfa.gov.lk | **தபால்:**<br>மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்),<br>பொது நிர்வாகப் பிரிவு,<br>வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு,<br>குடியரசுக் கட்டிடம்,<br>கொழும்பு 01, இலங்கை. |

### தகைமைகள் மற்றும் கல்வித் தேவைகள்

**ஒவ்வொரு விண்ணப்பதாரரும்**

- இலங்கைக் குடிமகனாக இருத்தல்
- உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றத் தகுதியானவராக இருத்தல் வேண்டும்
- சிறந்த ஒழுக்கக் குணம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- சிறந்த தகவல் தொடர்பாடல் திறனைக் கொண்டிருத்தல்

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்**

1. முகாமைத்துவம், சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய ஆய்வுகள் அல்லது பல்கலைக்கழக மானிய ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் தொடர்புடைய துறையில் முதுகலைப் பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறைப் பட்டய நிறுவனத்தில் பதவியின் விடயப்பிரிவுக்கு பொருத்தமானதான நிறுவன உறுப்புரிமையைக் கொண்டிருத்தல்.

   **மற்றும்**

   முதல் பட்டம் பெற்ற பிறகு கூட்டுத்தாபனம், அதிகாரசபை / நிறுவனமொன்றில் அல்லது புகழ்பெற்ற தனியார் துறை நிறுவனமொன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 5 வருடகால நிரூபிக்கப்பட்ட சேவை அனுபவம் அடங்கலாக, **"முகாமைத்துவ மட்டத்தில்"** குறைந்தது 20 ஆண்டுகால அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

   **அல்லது**

2. முகாமைத்துவம், சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய ஆய்வுகளில் முனைவர் பட்டம் அல்லது பதவியின் விடயப்பிரிவுக்கு பொருத்தமான வேறு ஏதேனும் பட்டம் பெற்றிருத்தல்.

   **மற்றும்**

   முதல் பட்டம் பெற்ற பிறகு கூட்டுத்தாபனம், அதிகாரசபை / நிறுவனமொன்றில் அல்லது புகழ்பெற்ற தனியார் துறை நிறுவனமொன்றில் "சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில்" 5 வருடகால நிரூபிக்கப்பட்ட சேவை அனுபவம் மற்றும் முகாமைத்துவ அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

**வயது**

65 வயதுக்குக் குறைவானவராக இருத்தல் ஏற்புடையது.

### மேலதிகக் குறிப்புகள்

அனைத்து விண்ணப்பதாரர்களும், விண்ணப்பக்கடிதம்(Cover Letter) மற்றும் சுயவிபரக்கோவையைச் (Resume) சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட மின்னஞ்சலுக்கு "pdf" வடிவத்தில் சமர்ப்பிக்கவும். நேர்முகத்தேர்வில் அதை அச்சுப் பிரதி வடிவில் சமர்ப்பிக்கவும்.

**லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாயக் கற்கைகள் நிறுவனத்தின் (LKIIRSS) நிர்வாகக் குழுவின் உத்தரவிற்கிணங்க வெளியிடப்பட்டுள்ளது.**

**செயலாளர்,**
**வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு**
**கொழும்பு 01.**